REGD. NO. M. 6911 ★ தனி இதழ் 0—1—0 ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

'நம் நாடு'
புதிய சந்தா விகிதம்
[ஏப்ரல் 4-ந் தேதியிலிருந்து]
★

மூன்று மாதம்	...	...	ரூ. 6
ஆறு மாதம்	...	...	ரூ. 12
ஒரு வருடம்	...	...	ரூ. 24

தனி இதழ் 7 காசுகள்
இலங்கையில் 10 சதம்

மலர் 4] சென்னை: பங்குனி 20உ செவ்வாய் (2—4—57) ★ ★ வெளியூர்: பங்குனி 21உ புதன் (3—4—57) [இதழ் 252

'பொறுப்பான எதிர்க் கட்சியாகப் பணி புரிவோம்'

'ஆளும்கட்சியின் போக்கிற்குஒப்பவே எதிர்கட்சியின் நடைமுறை அமையும்'

'கழகத்தின் வெற்றி புதிய பொறுப்பான கட்டம்'

'நெஞ்சில் தோக்கி நிற்கும் துக்கம் தீவிரமாகப் பணியாற்றத் துணை நிற்கும்'

கடற்கரையில் அண்ணு முழக்கம்

****

தோழர்கள் கவனத்திற்கு!

4-4-57 வியாழன் முதல் 'நம் நாடு' இதழ் ஒன்றின் விலை 7 காசு என்பதை நினைவுறுத்திக் கொள்ள வேண்டுகிறோம். தோழர்களே! இதனை மறவாதீர்!!

****

எதிர்க் கட்சி எப்படியிருக்கும் என்பது ஆளுங் கட்சியைப் பொறுத்தது என்ற உண்மையை அழகாக விளக்கியுள்ளார், நமது அண்ணு அவர்கள்!

'ஏனோதானு என்ற போக்கில், எடுத்தேன்-கவிழ்த்தேன் என்று ஆளும் கட்சி நடந்துகொள்ளுமானல், அதற்கொப்பவே எதிர்க் கட்சி இயங்க முடியும்' என்று எச்சரித்தார், அவர்!

இலட்சக்கணக்கான மக்களிடை முழக்கமிட்ட அண்ணு அவர்கள், 'எதிர்க் கட்சியினருக்குத் தரவேண்டிய மரியாதையுடன் ஆளுங் கட்சியினர் அவர்களை நடத்துவார்களேயானல்—அந்தப் பொறுப்புணர்ச்சி அவர்களிடம் இருக்குமானல், நாமும் பொறுப்புள்ள எதிர்க் கட்சியாகச் சிறப்புடன் பணியாற்றுவோம்' என்று எடுத்துரைத்தார்.

'கல்லடியும் சொல்லடியும் தாங்கிப் பழக்கப்பட்டுள்ள நமது கழகத்தவரைவிட, எதிர்க் கட்சியாகப் பணியாற்ற வேறு யாரால் முடியும்?' என்று வினவினர், அண்ணு!

நமது வெற்றி சாதாரணச் சம்பவம் அல்ல; தமிழக அரசியல் வரலாற்றில் புதியதோர் கட்டம்' என்பதை விளக்கிய அவர், 'நமது கழகத்தின் வரலாற்றிலும் இது, புதிய பொறுப்பான கட்டம்' என்பதை விளக்கிக் கூறினர்.

அண்ணு அவர்கள், கடந்த மார்ச் 31-ந் தேதியன்று சென்னை-திருவல்லிக்கேணி கடற்கரையில், வெற்றிபெற்ற கழகத் தோழர்களைப் பாராட்டி நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் ஆற்றிய பேருரையின் ஒரு பகுதி இங்கு தரப்படுகிறது:

★

முக்கியத்துவம் வாய்ந்தது

"15 பேர்தானே வெற்றி பெற்ருர்கள் என்று கேலி பேசுகின்றனர்—ஏளனம் செய்கின்றனர்; 'திராவிட முன்னேற்றக் கழகம் பெற்ற வெற்றி அதிகமா குறைவா?'—என்ற சர்ச்சையில் ஈடுபடுகின்றனர்; அவர்களுக்கு நான் கூறவிரும்புகிறேன்—'நாங்கள் பெற்ற வெற்றி குறைவானதுதான் என்ருலும், முக்கியத்துவம் வாய்ந்ததாகும்,'—என்று!

அதே தலைவர்கள்

"இன்று கேலி பேசுகிற அதே தலைவர்கள், நாம் தேர்தலில் ஈடுபடுகிருேம் என்று அறிவித்ததும், 'இவர்களுக்கு' என்றுகூட அல்ல—'இதுகளுக்கு, தேர்தலில் போட்டியிட யார் கிடைப்பார்கள்?'—என்று, பேசினுர்கள். கழகத்தின் சார்பில், நமது பொதுச்செயலாளர் தலைமையில், நமது தோழர்கள் ஐந்து பேர் நாடெங்கிலும் சென்று, தேர்தல் சூழ்நிலைகளை ஆராயப் புறப்பட்டனர்.

பஞ்சபாண்டவர்!

"அப்போது கூறினர்—'பஞ்சபாண்டவர்'கள் சென்று சுற்றிப் பார்த்துவிட்டு, சென்னையிலேயே தங்கியிருக்கிற கண்ணனை வந்து பார்த்து, 'கண்ணு, கண்ணு! தேர்தலுக்கு நிற்க ஆளே கிடைக்கவில்லை,' என்று கூறுவது போலவும், கண்ணன் பஞ்ச பாண்டவர் வடிக்கும் கண்ணீர்த் துளிகளைத் துடைப்பது போலவும் கேலி மொழி பேசினுர்கள்!

ஒருவர்கூட!

"பின்னர், 150 இடங்களில் நாம் போட்டியிட வாய்ப்பு இருக்கிறது என்று அறிவித்தான பிறகு, '150 பேர் போட்டியிட்டால் என்ன? இவர்களில் ஒருவர் கூட வெற்றி பெறமாட்டார்கள்' என்று ஏளனம் செய்தனர்.

என்றும்வாழ்த்தியவர்கள் அல்ல!

"நாம் இப்போது 15 இடங்களைப் பெற்றிருப்பது கண்டு, '15 இடங்களைத்தானே பெற்ருர்கள்?' என்று பேசுகிருர்கள்.

"எனவே, இன்று ஏளனம் செய்வோர்—கேலி பேசுவோர் என்றுமே நம்மை வாழ்த்தியவர்கள் அல்லர்! நமது வளர்ச்சி, அவர்களின் வீழ்ச்சி!

"அவர்கள், நம்முடைய வளர்ச்சியில் அவர்களுடைய வீழ்ச்சி இருப்பதாகக் கருதிக் கொண்டிருப்பவர்கள்.

துக்கம் தொக்கி நிற்கிறது

"மற்ற மற்றக் கட்சியினர் நம்மைக் கேலி பேசும்போது—'15 இடங்கள்தானே பெற்றனர்?' என்று ஏளனம் செய்யும்போது அதில், துக்கம்தான் தொக்கி நிற்கிறது. அவர்களது கேலி மொழிகள், நமக்கு மேலும், உற்சாகத்தைத் தரட்டும்!

ஈட்டி பாய்ந்த இதயத்துடன் செல்கிருேம்!

"அவர்களது கேலி மொழியில், நமது நாவலர் வெற்றிபெறவில்லையே என்ற துக்கமும் கலந்திருக்கிறது. நாங்கள் 15 பேர் சட்ட சபைக்குச் செல்லும்போது, ஈட்டி பாய்ந்த இதயத்துடன்தான் செல்கிருேம்.

நாவலரும்

"நமது நாவலரையும் என்றைக்கு நாம் சட்ட மன்றத்திற்குள் அழைத்துச் செல்கிருேமோ அன்றுதான் நாம் மன நிம்மதிபெற முடியும்.

பொறுப்புகள் என்ன?

"சட்ட மன்றத்திற்குச் செல்லும் நமது தோழர்களுடைய பொறுப்புகள் மூன்று வகையானவையாகும்; ஒன்று—அங்கே நடைபெறக்கூடிய விவாதத்தை நாகரீகமான தாக்குவது; இரண்டாவது—அவரவர்கள் அவரவர் தொகுதி நலன்களுக்கான காரியங்களைச் செய்யவேண்டிய பெரும் பொறுப்பு; மூன்ருவது—நமது தி. மு. கழகத்தின் அடிப்படைக் கோட்பாடுகளிலிருந்து வழுவாதிருப்பது. இந்தப் பொறுபபுகளை நாம் சரிவர நிறைவேற்றியாக வேண்டும்.

வெட்கப்படும்வரை!

"எனவே, கேலி பேசுகிறவர்கள் தயது செய்து நாங்கள் வெட்கப்படும் அளவுக்குக் கேலி பேச வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 'நாற்பது இடங்களில் டிபாசிட் இழந்தவர்களே' என்று பேசுங்கள்! அப்போதுதான், எங்களின் ஆர்வம் மேலும் பெருகும்; திராணி மேலும் வளரும்!

குதிரைக்குச் சவுக்கு!

"வேகமாக ஓடுகிற குதிரையைக்கூட சவுக்கால் தட்டிக் கொடுக்கிருர்களே, எதற்காக?

'மேலும் வேகமாக ஓடக்கூடியது அந்தக் குதிரை,' என்பதினுல்தான்!

"அதேபோலத்தான், இன்று நம்மைப்பற்றிப் பேசும் கேலி மொழிகளும் நம்மை மேலும் வேகமாக ஓடச்செய்ய, அந்தச் சவுக்கடிபோல பயன்படவேண்டும்.

பெரியார்

"பெரியார் கேலி பேசுகிருர் என்ருல், அது கேலி அல்ல! 'என்னிடத்தில் பாடம் பெற்றும் பதினைந்துதானு? எத்தனை ஆற்றல் தந்தேன்—அப்படியிருந்தும் பதினைந்துதானு?' என்று கேட்பது போலத்தான் பெரியார், நம்மைக் கேலி செய்வது இருக்கிறது.

★ ★ ★ ★

நன்றி!

வெற்றி விழா கொண்டாடுகிற இந்த நேரத்தில், கழகத்தின் தேர்தல் செலவுகளுக்காக நிதி திரட்டித் தந்த தோழர்களுக்கும், உற்சாகத்தோடு அயராது பாடுபட்ட நண்பர்களுக்கும் நான், கழகத்தின் சார்பில் நன்றி கூறிக்கொள்கிறேன்.

★ ★ ★ ★

ஒரே கம்பெனி

"இதனுல்தான் நான் அடிக்கடி கூறுகிறேன்—'ஒரே கம்பெனிதான்; லேபிள்தான் இரண்டு'—என்று!

வெற்றியின் தன்மை

"திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் பெற்ற வெற்றியின் தன்மை குறித்து, தலைமையுரை ஆற்றிய பொதுச்செயலாளர் அவர்கள் நன்ருக ஆராய்ந்து, தெளிவாக எடுத்துக் கூறினுர்.

"நாம் பெற்றுள்ள இடங்கள் 15-தான் என்ருலும், நாம் பெற்றுள்ள வாக்குகள் 17 இலட்சம் என்பதை அவர் விளக்கினுர்.

கெட்ட பேச்சு

"நமக்கு 17 இலட்சம் பேர் இந்தத் தேர்தலில் ஆதரவு தந்திருக்கிருர்கள்.

"நம்மைப் பற்றி மாற்றுக் கட்சிகள் அனைத்தும் எல்லாவிதமான கெட்ட பேச்சுக்களையும் பேசினர்; கெட்ட பிரச்சாரம் செய்தனர்; இழிமொழிகளை வீசினர்!

நாஸ்திகர்கள்

"'இவர்கள் எல்லாம் நாஸ்திகர்கள்; இவர்கள் வெற்றி பெற்ருல், ஆலயங்களில் ஆராதனை நடைபெருது; ஆஸ்தீகம் அழிந்துபடும்'—என்று கூறினுர்கள்.

உண்மை உணர்ந்தனர்

இதைக் கேட்ட பிறகும் தான், 'தி. மு. கழகத்தினர் நாஸ்திகர்கள் அல்ல; இவர்கள் ஆஸ்தீகத்தின் பெயரால் நடைபெறும் அக்கிரமங்களை மட்டுமே கண்டிப்பவர்கள்; அநியாயங்களை மட்டுமே அம்பலப்படுத்துபவர்கள்,' என்று உணர்ந்து, 17 இலட்சம் பேர் ஆதரவு அளித்திருக்கின்றனர்.

"இவர்கள் அழிவு வேலைக்காரர்கள் அல்ல என்பதை 17 இலட்சம் மக்கள் உணர்ந்து நமக்கு வாக்களித்திருக்கிருர்கள்.

பெரிய கட்சிகள்!

"இந்த கெட்ட பிரச்சாரத்தை எல்லாப் பெரிய கட்சிகளும்—நம்மை சிறுவர்கள் என்று ஏசுகிற எல்லாப் பெரிய கட்சிகளும்—நான் பெரிய கட்சிகள் என்று கூறுவதற்குக் காரணம், எல்லாப் பெரிய 'இடங்களை'யும் பிடித்துக் கொண்டிருக்கிறவர்கள் என்பதினுல்தான்—செய்தன; என்ருலும், நம்மீது நம்பிக்கை தெரிவித்திருப்பவர்களின் எண்ணிக்கை 17 இலட்சம் பேர்.

இன்று தருவதை அன்று தந்திருந்தால்!

'இந்து'வும், 'மித்திரனு'ம், 'விகடனு'ம் இன்று காட்டும் பரிவினை அன்றே காட்டியிருந்தால், 15 இடங்களை மட்டுமா பெற்றிருப்போம்?

சக்திதான் என்ன?

"17 இலட்சம் மக்களை நம் பக்கம் ஈர்த்திருக்கிருேம்; இப்படி ஈர்த்திருப்பதற்கு நம்மிடம் உள்ள சக்திதான் என்ன?

அடுக்கு மொழி

"அடுக்கு மொழி பேசத்தானே இவர்களுக்குத் தெரியும்? அடுக்கு மொழி பேசிவிட்டால் ஆகுமா?—என்று கேட்டார்கள், கேலி பேசினுர்கள்! எங்களுக்கு அடுக்கு மொழி பேச மட்டுமேதான் தெரியும் என்ருல், 17 இலட்சம் மக்களையும் ஈர்த்திருப்பது அந்த அடுக்கு மொழிதானு? அப்படியானுல், 'அடுக்கு மொழி ஒரு சக்தி அல்ல,' என்று வேறு பேசினுர்களே!

தடுக்கு மொழி

"இங்கு எனக்கு முன்பு பேசிய சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நமது தோழர்கள் யாரும் அடுக்கு மொழி பேசவில்லை. ஆனுல், நம்மைக் கேலி பேசுகிறவர்கள் பேசும் தடுக்குமொழியைவிட நமது அடுக்கு மொழியே மேலானது என்று மக்கள் கருதுகிருர்கள் என்பதையாவது ஒப்புவார்களா?

புதிய கட்டமும் பொறுப்பான கட்டமும்

"எனவே, நமது வெற்றி சாதாரணமான சம்பவம்

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.கழக நாளிதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 2—4—57 செவ்வாய்

யார் செய்த சதி?

சிறிய அளவில் உருக்குத் தொழிற்சாலை ஒன்றை பரீட்சார்த்த ஏற்பாடாக சேலம் மாவட்டத்தில் துவங்குவது என்று, அப்பகுதி மக்களின் தீவிரமான கோரிக்கைக்குப் பிறகு இந்தியப் பேரரசின் சார்பிலும் சென்னை மாகாண ஆட்சியின் சார்பிலும் அமைச்சர்கள் வாக்களித்திருந்தனர். அதற்காக நெய்வேலி நிலக்கரித் திட்டத்தின் வெற்றியை நிபந்தனையாகக் காட்டியும் இருந்தனர் அந்த அமைச்சர்கள்.

ஆனால், நெய்வேலித் திட்டத்தில் வெற்றி ஏற்படுவது நிச்சயிக்கப்படுவதற்கு முன்னாலேயே, கோவை மாவட்டத்தில் உருக்குத் தொழிற்சாலை ஒன்று துவங்கப்படும் என்றும், அதற்கான அனுமதி தனி நபருக்கு அல்லது நபர்களுக்கு அளிக்கப்பட்டு இருக்கிறதாகவும் பேரரசின் அமைச்சர் அறிவித்துள்ளார். சேலம் மாவட்டத்தில் கிடைக்கப்பெறும் இரும்பு தாதுப் பொருளைக் கொண்டு கோவையில் துவங்கப்பட இருக்கும் உருக்குத் தொழிற்சாலை செயல்படும் என்றும் அதே அமைச்சர் விளக்கமும் அளித்துள்ளார்.

நெய்வேலி நிலக்கரித் திட்டத்தின் வெற்றி பற்றிய முடிவு இன்றும் திட்டவட்டமாகத் தெரியாதிருக்கிறது. இந்த நிலையில் கோவையில் புதிதாகத் துவங்கப்பட இருக்கும் உருக்குத் தொழிற்சாலை, நெய்வேலி நிலக்கரியைக்கொண்டுதான் இயங்கக்கூடும் என உறுதியாகக் கூறுவதற்கில்லை. எனவே கோவை உருக்குத் தொழிற்சாலை, வங்காளத்திலிருந்தும் பீகாரிலிருந்தும் நிலக்கரியை இறக்குமதி செய்வதின்மூலம் தான், கண்டிப்பாக இயங்கியாக வேண்டும்.

உருக்குத் தொழிலுக்கு முக்கியத் தேவையாக உள்ள இரண்டு மூலப் பொருட்களான இரும்பு தாதுப் பொருளையும், நிலக்கரியையும் ஒன்று கொன்று கூடுதலான தொலைவில் இருந்து இறக்குமதி செய்துதான், கோவையில் அனுமதிக்கப்பட்டுள்ள உருக்குத் தொழிற்சாலை செயல்பட்டாக வேண்டும். மேற்குறிப்பிட்டுள்ள இரண்டு மூலப் பொருட்களில் ஒன்றுகூட, தொழிற்சாலை துவங்கப்பட இருக்கும் கோவை மாவட்டத்தில் இருக்கவில்லை. எனவே, கோவை உருக்குத் தொழிற்சாலை, வியாபாரத் துறையில் இலாபகரமான ஒன்றாக வெற்றிபெற இயலாது என்பது எதிர்பார்க்கக்கூடியதாகும்.

இந்த உண்மையை எவராலும் மறுக்க முடியாது. இந்தியப் பேரரசும் இதைத் தெரிந்து கொள்ளாமல் இருக்க முடியாது.

கோவைக்கு அனுமதிக்கப்பட்டுள்ள உருக்குத் தொழிற்சாலை இலாபகரமாக இயங்குமா இல்லையா என்பது ஒரு பக்கம் இருக்க, இரும்புக் கனிப் பொருளைத் தேவையான அளவு தன்னகத்தே கொண்டிருக்கும் சேலம் மாவட்டத்திற்குக் காட்டத்தீரவேண்டிய சலுகையை மறந்துவிட்டு, இரும்புத் தாதுப் பொருளைப் பெற்றில்லாத கோவை மாவட்டத்திற்கு அதே சலுகையைக் காட்ட வேண்டிய கட்டாயம் இந்தியப் பேரரசிற்கு எப்படி வந்தது? அச்சலுகையை சேலத்திற்கு இல்லாமல் செய்து கோவைக்குப் பெற்றுத்தந்த குலாக்கேடர் யார்?—என்பன பற்றிச் சிந்தித்தாக வேண்டும்.

தங்கள் மாவட்டத்திற்கு சிறிய அளவிலோ பெரிய அளவிலோ ஒரு உருக்குத் தொழிற்சாலை தேவை என்று, இதுவரை கோவை மாவட்டத்தில் குரலெழுப்பினவர் கிடையாது. மூலப் பொருட்களான இரும்பு கனிப் பொருளும் நிலக்கரியும் அறவே பெற்றில்லாத நிலையில், தனக்கு உருக்குத் தொழிற்சாலை வேண்டும்என்று கோவை மாவட்டம் எப்படிக் கேட்க முன்வரும்?

குறிப்பிட்ட ஒரு தொழிலுக்கு இன்றியமையாத் தேவையாக இருக்கக்கூடிய மூலப் பொருட்கள் தங்கள் மாவட்டத்தில் கிடைக்கப் பெறுகிற பொழுது, அவைகளைக்கொண்டு இயங்கித் தீரவேண்டிய தொழிற்சாலையைத் தங்கள் மாவட்டத்தில் துவங்கத்தான் வேண்டும் எனக் கோருவது நியாயமற்றது — பொருத்தமற்றது என்ற உண்மையைக் கோவை மாவட்ட மக்கள் நன்கு உணர்ந்தே இருக்கின்றார்கள். அந்த உண்மையைத் தெளிவாகக் கோவை மாவட்ட மக்கள் தெரிந்திருக்கின்ற காரணத்தால்தான், அவர்கள் இதுவரை, தங்கள் மாவட்டத்தில் உருக்குத் தொழிற்சாலை ஒன்றைத் துவங்க வேண்டும் எனக் கோர முன்வராது இருந்திருக்கிறார்கள்.

உருக்குத் தொழிற்சாலை தேவை என்று கோவை மக்கள் கோரவில்லை என்பதுடன், அங்குள்ள தொழிலதிபர்களில் எவரும் இதுவரைக் கோரினதாகவும் தெரியவில்லை. அது பற்றிய செய்தி எதுவும் இதுவரை உலாவினதும் கிடையாது.

சேலம் மக்கள் கோரினார்கள் —தீவிரமாகக் கோரினார்கள்.

கோரிக்கை, புயல் உருவம் கூடப்பெற்றது!

சேலம் மாவட்டத்தில் இரும்புக் கனிப் பொருள் ஏராளமாக இருந்துவருகிறது.

சேலம் உருக்குத் தொழிற்சாலை வேண்டும் என்று கோரிக்கைக்கும், இரும்புக் கனிப் பொருளைப் பண்படுத்த மேற்கொள்ளப்பட்டுவந்த முயற்சிகளுக்கும், ஒரு சிறந்த வரலாறே இருக்கிறது.

இவ்வளவு சாதகமான நிலைமைகள் இருந்தும், மக்கள் சக்தி அதற்கு பக்கபலமாக அமைந்திருந்தும்கூட, சேலம் மாவட்ட மக்களுக்கு சிறிய அளவிலாவது ஒரு உருக்குத் தொழிற்சாலை கிடைக்கவில்லை—ஏமாற்றமும் பெரும் ஏமாற்றமும் கிடைத்திருக்கிறது!

கோவை மாவட்டத்தில் இரும்புக் கனிப்பொருள் கிடையாது. நிலக்கரி கிடையாது. நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்திற்கு வெகு தொலைவில் இருக்கிறது.

உருக்குத் தொழிற்சாலை வேண்டும் என்று கோவை மக்கள் கேட்டதில்லை. நெஞ்சினால் நினைத்துப் பார்க்கவும் இல்லை. உருக்குத் தொழிற்சாலை குறித்து, கோவை தொழிலதிபர்கள் சிந்தித்ததும் கிடையாது.

உண்மை இவ்வாறு இருக்க, தனக்கு உரிமையான உருக்குத் தொழிற்சாலையைப் பெற, சேலம் மாவட்டத்தால் இயலவில்லை!

ஆனால், தான் கனவுகூட கண்டறியாத உருக்குத் தொழிற்சாலையை, கோவைச் சீமான்களால் பெறமுடிந்திருக்கிறது!

இந்தியப் பேரரசிடம், தனக்குரித்தான நீதியைக் கோர, உரிமைப் போர் வழங்கும்படி வாதாட, சேலம் மாவட்டம் ஆற்றல் மிக்க அரசியல் வாதிகளைப் பெற்றிருக்கவில்லை—அதற்கு மாறாக, தேவையற்ற சலுகையை இந்தியப் பேரரசிடமிருந்து பெற்றுத் தரக்கூடிய அரசியல் தலைவர்களை கோவை மாவட்டம் பெற்றிருக்கிறதோ என்ற ஐயப்பாட்டைத்தான் எவரும் கொள்ளவேண்டியதாக இருக்கிறது.

எனவே, சதி நடந்திருக்கிறது இத்துறையில்—மகத்தான அரசியல் சதி நடந்திருக்கிறது என்றுதான் நாம் முடிவு கட்டவேண்டியவர்களாக இருக்கிறோம்.

அதுவுமன்றி, கோவை மாவட்டத்திற்கு எதிராக சேலம் மாவட்டத்தை மோதவிடும் சிறு செயலும், இப்போக்கில் அமைந்திருக்கிறது என்பதை நாம் அறிந்து கொள்ளவேண்டும்.

ஆழ்கடல் முத்து தரும் விலை மதிப்பு!

சென்னை, மார்ச் 31—

தூத்துக்குடி மன்னார் வளைகுடாவில் இம்மாதம் ஆரம்பமான முத்துக்குளிப்பால் $2\frac{1}{4}$ காரட் எடையுள்ள ஒரு முத்து கண்டெடுக்கப்பட்டுள்ளது என்றும் இதன் மதிப்பு ரூ. 700-க்கு மேல் செல்லக்கூடுமென்றும், ஆனால் வெளிநாடுகளில் இந்த முத்துக்கு ரூ. 2,000 வரை கிடைக்கக்கூடுமென்றும் செய்தி தரப்பட்டிருக்கிறது.

கடந்த 10 நாட்களில் 20 இலட்சம் முத்துச் சிப்பிகள் எடுக்கப்பட்டுள்ளனவாம்.

சுமார் 1,000 பேர் முத்துக் குளிப்பில் ஈடுபட்டனராம்.

செயற்கை முறையில் இரப்பர் உற்பத்தி

புதுடில்லி, மார்ச் 31—

1965-ம் ஆண்டுக்குள் இந்தியாவிற்கு மொத்தம் 50,000 டன் இரப்பர் தேவைப்படுமாம்.

இயற்கை இரப்பர் உற்பத்தி 30,000 டன் மட்டுமே இருக்கும்; எனவே, பற்றாக்குறையாக உள்ள 20,000 டன் இரப்பரை செயற்கை முறையில் உற்பத்திச் செய்யும் தொழிற்சாலை ஒன்றை அமைக்க இந்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக மக்களவையில் கனரகத் தொழில் அமைச்சர் கூறியுள்ளார்.

கைத்தறித் துணிகளின் உற்பத்திக் குறைவு?

புதுடில்லி, மார்ச் 31—

கைத்தறித் தொழில் மந்தமாக இயங்கி வருகிறது.

1955-ம் ஆண்டு 145,40,00,000 கெசம் கைத்தறித் துணி உற்பத்தி செய்யப்பட்டது.

147,90,00,000 கெசம் கைத்தறித் துணி மட்டுமே 1956-ம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது.

வெற்றி பெற்றோருக்கு புரட்சி நடிகர் தந்த நல்விருந்து

சென்னை, ஏப். 1—

வெற்றி பெற்ற திராவிட முன்னேற்றக் கழக எம்.எல்.ஏ., எம்.பி.-க்களுக்கு புரட்சி நடிகர் எம். ஜி இராமச்சந்திரன் அவர்கள் 31-3-57 பகல் 1-மணியளவில் தனது இல்லத்தில் ஒரு நல் விருந்தளித்தார்.

கழகத்தின் வெற்றியால் தனக்கு ஏற்பட்டுள்ள மகிழ்ச்சியைக் கொண்டாடவும், வெற்றி பெற்ற அண்ணா, மற்றும் இதரரைப் பாராட்டவுமாக அவர் நடத்திய அந்த விருந்தில் அண்ணா, மற்றும் வெற்றிபெற்ற அனைவரும், பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன், மற்றும் கழக முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

விருந்துக்கு வந்த அனைவரையும் குணசித்திர நடிகர் எம். ஜி. சக்ரபாணி அவர்கள் வரவேற்றார்.

புரட்சி நடிகரும், எம். ஜி. ஆர். நாடக மன்றத்தவரும், வந்திருந்த அனைவரையும் கனிவுடன் உபசரித்தனர்.

'தங்களின் நல்விருந்திற்கு அனைவரின் சார்பில் நன்றி கூறுகிறேன்' என்று நமது பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் அவர்கள் புரட்சி நடிகரிடம் தெரிவித்தார்கள்.

புரட்சி நடிகர் நன்றி

தனது அழைப்பிற்கு இணங்கி வருகை தந்து, விருந்தினைச் சிறப்பித்த அனைவருக்குமாகப் பொதுச்செயலாளரிடம் இராமச்சந்திரன் அவர்கள் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

★

'வெற்றி கண்டு மகிழ்கிறேன்'

"திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் ஈடுபட்டு, மகத்தான வெற்றிகளை ஈட்டியுள்ளது கண்டு நான் மட்டிலா மகிழ்ச்சியடைகிறேன்.

"கழகத்திற்கு இந்த வெற்றிகளைத்தந்த நாட்டு மக்களுக்கு என் உளம்கனிந்த நன்றியையும் பாராட்டினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

"எதிர்காலத்தில், கழகம் மேலும் பல வெற்றிகளைப் பெற்று, நாட்டினை மீட்கவும் நாட்டு மக்களை வாழ்விக்கவும் மக்கள் தங்களின் ஆதரவினைத் தொடர்ந்து நல்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். நான், என்னால் இயன்ற பணியை கழகத்தின் வளர்ச்சிக்கு என்றென்றைக்கும் செய்யக கடமைப்பட்டிருக்கிறேன். வாழ்க திராவிடம்! வெல்க தி. மு. கழகம்!"

என்று, புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் ஒரு அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

பீகார் ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு

போராட்டத்திற்குப் பணிந்து மாநில சர்க்கார் முடிவு

பாட்னா, மார்ச் 31—

சர்க்கார் நிர்வாகத்திலில்லாத செகண்டரி பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் சம்பளத்தை உயர்த்துவது என்று பீகார் மாநில சர்க்கார் ஒரு முடிவு செய்திருக்கிறதாம்.

குறைந்தபட்சம் தரப்படுகிற சம்பளத்துடன் ரூ. 25 உயர்த்துவது என்றும், தலைமை ஆசிரியர்களுக்கு ரூ. 75 சம்பள உயர்வு தருவது என்றும் முடிவாகியிருக்கிறதாகத் தெரியவருகிறது.

இந்தச் சம்பள உயர்வு கோரிக்கைக்காக பீகார் மாநில ஆசிரியர்கள் பெரும் போராட்டம் நடத்தினர் என்பது தெரிந்ததேயாகும்.

மகாரியஸ் பாதிரியார் விடுதலை எதிரொலி!

மகாரியஸ் பாதிரியார் (சைப்ரஸ் விடுதலைப் போராட்டத் தலைவர்) விடுதலை செய்யப்பட்டது தனக்குப் பிடிக்கவில்லை எனக் கூறி சாலிஸ்பரி பிரபு, பிரிட்டிஷ் சர்க்காரிலிருந்து விலகியுள்ளாராம்.

அவரது விலகல் தனக்குப் பெரும் வருத்தத்தைத் தருவதாக பிரிட்டிஷ் வெளிவிவகார மந்திரி செல்வின் லாயிட் கூறியிருக்கிறார்.

தங்கள் கருத்துக்கள் ஏற்கப்படாதபோது, மந்திரிகள் கூட தங்கள் பதவிகளைத் துறப்பது வழக்கம்தான் என்றும் அவர் ஆறுதல் கூறியிருக்கிறார்.

'மகாரியஸ் பாதிரியார் சிறை வைக்கப்பட்டிருப்பதைவிட, விடுதலை செய்யப்படுவதே நல்லது என்று சர்க்கார் கருதுகிறது; ஆனால் சாலிஸ்பரி பிரபு இதை ஏற்றுக்கொள்ளவில்லை' என்றும் லாயிட் கூறியிருக்கிறார்.

இந்திய நாணயங்கள்

சில குறிப்புகள்

முதலாவது இந்திய ரூபாய் நாணயம் 1757 ஆகஸ்டு 27-ந் தேதி கல்கத்தாவில் அச்சடிக்கப்பட்டது; கிழக்கிந்தியக் கம்பெனி நவாப் சிராஜ்-உத்-தௌலாவுடன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி அந்த நாணயச்சாலை அங்கு நிறுவப்பட்டது.

நவீன முறையிலுள்ள முதலாவது நாணயச்சாலைக்கு 1824-ல் கல்கத்தாவில் அடித்தளமிடப்பட்டது. ரூ. 13 இலட்சம் மதிப்புள்ள இயந்திரச் சாதனங்கள் கல்கத்தா நாணயச்சாலையில் நிறுவப்பட்டன. 1829 ஆகஸ்டு 1-ந் தேதி அந்த நாணயச்சாலை ஆரம்பித்துவைக்கப்பட்டது. அந்த சமயத்தில் அந்த நாணயச்சாலை தினசரி 2,00,000 வெள்ளி நாணயங்களை அச்சடிக்கும் சக்தியுள்ளதாய் இருந்தது.

இந்திய சுதந்திரத்திற்குப் பிறகு உடனடியாக நிர்மாண வேலை ஆரம்பிக்கப்பட்ட புதிய அலிப்பூர் நாணயச்சாலை 1952 மார்ச் 19-ந் தேதி திறக்கப்பட்டது. இந்த நாணயச்சாலைக்கு தினசரி 8 மணி நேர வேலை விடுதிப்படி (ஷிப்ட்) 12 இலட்சம் நாணயங்கள் அச்சிட முடியும்.

1914 முதல் இந்தியா எத்தனையோ வெளிநாடுகளுக்கு நாணயங்களை அச்சடித்துத் தந்திருக்கிறது; அத்தகைய நாடுகளில் ஆஸ்திரேலியா, பூடான், இலங்கை, எகிப்து, பாஸ்தான், சவூதி அரேபியா, இந்தியாவிலுள்ள போர்த்துக்கீசிய காலனிகள், பிரிட்டிஷ் கிழக்காப்பிரிக்கா முதலியவைகளும் அடங்கும். இந்தியாவிலிருந்து சமஸ்தானங்களுக்காகவும் அது, நாணயங்களை அச்சிட்டுத் தந்தது.

கல்கத்தா நாணயச்சாலை யுத்த காலத்தில் அதிகமான நாணயங்களைத் தயாரித்தது; 1944—45-ல் உற்பத்தியான நாணயங்களின் மொத்த எண்ணிக்கை 104,87,[illegible],800 ஆகும். இது உலகத்திலேயே மிக உச்சமான ஒரு சாதனையென்று சொல்லலாம்.

கல்கத்தா நாணயச்சாலை விருதுப் பதக்கங்கள், சின்னங்கள் முதலியவைகளையும் தயாரிக்கின்றது; பொதுமக்கள் உபயோகத்துக்கான எடைகளையும், படிகளையும் சரிபார்க்கிறது.

கழகச் செய்திகள்

வால்பாறை:
22—3—57 மாலை 7 மணிக்கு, வால்பாறை வி. ஜபார் கடையில், தோழர் ஆர். முத்துசாமி தலைமையில் தி. மு. கழகத் துவக்க விழா நடைபெற்றது. தோழர்கள் என். கே. கணபதி செயலாளராகவும், ஆர். மாரிமுத்து துணைச் செயலாளராகவும், கே. முத்தையா பொருளாளராகவும், வி. தங்கையா மாவட்டப் பிரதிநிதியாகவும், எம். வி. திராவிடமணி, மு. நாராயணன், என். பி. சாமிதாஸ், வி. ஜபார், எம். சின்னக்கண்ணு, ஆர். கருப்பையா ஆகியோரை செயற் குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

உதயமார்த்தாண்டபுரம்:
23—3—57-ல் உதயமார்த்தாண்டபுரம் தி. மு. க. அமைப்புக் கூட்டம் தோழர் இரா. நாடிமுத்து கடையில் தோழர்கள் ஆர். இராசகோபால் தலைமையிலும், ந. தருமலிங்கம் முன்னிலையிலும் நடைபெற்றது. தோழர்கள் சி. ப. சுப்பிரமணியம் செயலாளராகவும், கா. வீரையன் துணைச் செயலாளராகவும், செ. செப்புமுகமது பொருளாளராகவும், டி. எஸ். கணபதி மாவட்டப் பிரதிநிதியாகவும், பி. எஸ். கூத்தபெருமாள், ஏ. எம். சேகு உதுமான், ஆர். இராசகோபால், வி. சொக்கலிங்கம், வி. தெட்சிணாமூர்த்தி, ஏ. இராமசாமி, எம். சுப்பையன், எஸ். இராமராசன், என். சாமிநாதன் ஆகியோர் செயற்குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது.

ஆமதாபாத்-சமால்பூர்
24—3—57 மாலை 6-மணிக்கு ஆமதாபாத்—சமால்பூர் கிளைக் கழக உறுப்பினர்கள் கூட்டம் தோழர் டி. பி. பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் இரா. தணிகாசலம் செயலாளராகவும், பொ. இரத்தினவேலன் துணைச்செயலாளராகவும், பொ. சண்முகம் பொருளாளராகவும், புரட்சி—ச. பாண்டியன், நா. தேவராசு, இரா. வைத்திலிங்கம், பி. தில்லை கோவிந்தன், வே. அருளப்பன், அ. முருகேசன், எஸ். ஜி. பதி, வி. பெத்தப்பா ஆகியோர் செயற்குழுவினராகவும், கி. சண்மும், புரட்சி—ச. பாண்டியன், இரா. வைத்தியலிங்கம், பொ. சண்முகம் ஆகியோர் பொதுக்குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

கழகத் தோழர்களுக்கு வாக்களித்த தமிழக வாக்காளர்களுக்கு நன்றிகூறி ஒரு தீர்மானமும், வெற்றிபெற்ற கழகத் தோழர்களைப் பாராட்டி ஒரு தீர்மானமும், ஒரு அனுதாபத் தீர்மானமும் நிறைவேறின.

வடகோவை:
14—3—57 இரவு 8 மணிக்கு, கழக மனையில், தோழர் எஸ். ஏ. இராசமாணிக்கம் தலைமையில் கிளைக் கழகத் தேர்தல் நடைபெற்றது. தோழர்கள் ந. சுந்தரம் செயலாளராகவும், அ. இளங்கோவன் துணைச் செயலாளராகவும், சு. பரமசிவம் பொருளாளராகவும், மற்றும் 10 உறுப்பினர்களை செயற் குழுவினராகவும் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இலங்கை-புறக்கோட்டை
24-3-57-ல் இலங்கை—புறக்கோட்டை தி. மு. கழக செயற்குழு, கழகப்பணி மனையில் தோழர் சுப. அருணாசலம் தலைமையில் நடைபெற்றது. துணைச் செயலாளராகப் பணியாற்றிய தோழர் யாழ்வாணன் விலகலை ஒப்புக்கொண்டு, புதிய துணைச் செயலாளராக தோழர் 'பூங்கா' ஏ. இருமுகன் தேர்ந்தெடுக்கப்பட்டார். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

கரூர் - பசுபதிபாளையம்
24—3—57 இரவு 8 மணிக்கு, கரூர் - பசுபதிபாளையம் தி. மு. க. அமைப்புக் கூட்டம் தோழர் டி. கருப்பண்ணன் தலைமையில் நடைபெற்றது. கரூர் நகர செயலாளர் தோழர் எம். கே. கரிகாலன் அமைப்பு முறை பற்றி விளக்கிய பின், தோழர்கள் டி. கருப்பண்ணன், செயலாளராகவும், பி. வேம்படியான் துணைச் செயலாளராகவும், சி. லிங்கமூர்த்தி பொருளாளராகவும், மற்றும் 12-செயற்குழுவினரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

உளுந்தூர்பேட்டை:
21—3—57 இரவு, இவ்வூர் தி. மு. கழகச் செயற்குழு, தோழர் வீ. இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது; பல முக்கியத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சென்னை - ஆலந்தூர்
17—3—57 காலை 9 மணிக்கு, கழக மாடியில் தோழர் எஸ். பாலன் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் நான்கு முக்கியத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருவில்லிபுத்தூர்
24-3-57 மாலை 6 மணிக்கு நகர தி. மு. கழக செயற்குழு தோழர் காலசாமி இல்லத்தில் தோழர் மா. 'குருசாமி தலைமையில் நடைபெற்றது. திரு. பி. எஸ். குமாரசாமி இராசா மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், திரு வில்லிபுத்தூர் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தும், வெற்றி பெற்ற கழகத் தோழர்களுக்குப் பாராட்டுதெரிவித்தும், வரவு—செலவு பற்றியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருச்சி 12-வது வட்டம்:
24—3—57 காலை 10-30 மணியளவில் மேற்படி வட்டத் தி.மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம் தோழர் தி. அ. அய்யாசாமி தலைமையில் நடைபெற்றது. கழக ஆக்க வேலை குறித்தும், 1-4-57 முதல் துவக்கவிருக்கும் 'நெடுஞ்செழியன் படிப்பகம்' பற்றியும் தோழர்கள் தி. வீ. பொன்னுசாமி, டி. ஞானம்வேலன், கே. பாலகிருஷ்ணன் ஆகியோர் பேசினர்.

முருகூர்:
22—3—57-ல், திருச்சி மாவட்டம்—முருகூர் தி. மு. கழகக் கிளை உறுப்பினர்கள் கூட்டம் தோழர் பெ. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் தி. இராமசாமி செயலாளராகவும்; ச. முத்தையா துணைச் செயலாளராகவும், சோ. தங்கவேல் பொருளாளராகவும்; இரா. இளமுருகு மாவட்டப் பிரதிநிதியாகவும் மற்றும் 8 செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். முக்கிய இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வீரசோழபுரம்:
22—3—57 மாலை 4-மணிக்கு, உடையார்பாளையம் வட்ட வீரசோழபுரம் தோழர் எஸ். இராசகோபால் தலைமையில் நடைபெற்ற தி. மு. கழகச் செயற்குழுவில் பொதுத்தேர்தலில் சென்னை சட்டசபைக்கும், டில்லி பாராளுமன்றத்திற்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட கழகத் தலைவர்களுக்கு வாழ்த்தும், வாக்களித்து வெற்றி தேடித்தந்த வாக்காளர்களுக்கு நன்றியும் கூறி தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது.

ஜாரியா, மார்ச் 31—
இந்தியா கடந்த சனவரித் திங்களில் 90,567 டன், பிப்ரவரித் திங்களில் 92,070 டன் நிலக்கரியை பாகிஸ்தானுக்கு ஏற்றுமதி செய்திருக்கிறதாம்.

அன்பளிப்புகள்

குடந்தை தோழர் எம். ஏ. சி. இராமலிங்கம் அவர்களது துணைவியார் தோழியர் பழனியம்மாள் 18—3—57-ல் ஒரு ஆண்மகவுக்குத் தாயானார்கள். இது நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

எலப்பாக்கம் தி. மு. கழகச் செயலாளர் தோழர் கு. கார்த்திகேயன் அவர்களது துணைவியார் தோழியர் சி. எல்லம்மாள் 20—3—57-ல் ஒரு ஆண்மகவுக்குத் தாயானார். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

18—3—57-ல், ராப்ராய் தி. மு. கழக துணைச் செயலாளரின் துணைவியார் தோழியர் வள்ளியம்மை ஓர் பெண் மகவுக்குத் தாயானார்; தாயும் சேயும் நலம். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

16—3—57 காலை 6 மணிக்கு, அயன்புரம் தோழர் சு. குப்புசாமியின் துணைவியார் தோழியர் கிருட்டினவேணி ஓர் பெண் மகவுக்குத் தாயானார்; அம்மகவுக்கு 'சத்தியவாணி' என பெயரிடப்பட்டது. அதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

வேலூர் (வ. ஆ.) தோழர் பி. பாலசுந்தரம் அவர்களது துணைவியார் தோழியர் சாரதா அவர்களின் ஆண் மகவுக்கு 'சுகிர்தன்' என பெயரிடப்பட்டதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1/ அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

நாமக்கல் தொகுதியிலிருந்து மக்கள் சபைக்குக் கழக அபேட்சகராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர் ஈ. வி. கே. சம்பத் அவர்களுக்கு வகுரம்பட்டி (சேலம்) தி. மு. க. சார்பில் பாராட்டு விழா நடைபெற்றது; இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

சென்னை-16-ம் வட்ட அண்ணா பிள்ளை வீதி, 67-ம் எண். இல்லத்திலிருக்கும் 'மக்கள் பணி மன்றத்'தின் சார்பில் 'நம் நாடு' வளர்ச்சிக்காக ரூ. 1/ அன்பளிப்பாகத் தரப்பட்டது.

சென்னை நகரத் தொகுதியில் வெற்றி பெற்ற ஏ.வி.பி. ஆசைத்தம்பிக்குப் பாராட்டு

விருதையிலும் மதுரையிலும் வரவேற்பு

★

விருதுநகர்:
28—3—57 காலை சென்னை—ஆயிரம்விளக்குத் தொகுதியில் வெற்றி பெற்ற தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்களை புகைவண்டி நிலயத்தில் விருதுநகர் தி. மு. கழகச் சார்பில் தோழர் க. சுப்பிரமணியம் அவர்களும் மற்றும் பலரும் மலர்மாலை அணிவித்து வரவேற்றனர்; புகைவண்டி நிலயத்திலிருந்து தோழர் ஆசைத்தம்பி அவர்களை 'சாரட்டில்' அமரச் செய்து மாபெரும் ஊர்வலமாகப் புறப்பட்டது. ஊர்வலத்திற்கு முன் ஒரு தோழர் குதிரை மீதமர்ந்து முன் நடத்திச் செல்ல, பாண்டுவாத்தியம் முழங்க, வாணவெடிகள் விண்ணதிர, மக்கள் இலட்சிய முழக்கமிட்டுச் சென்ற காட்சி அருமையாக அமைந்திருந்தது. ஊர்வலம் நடைபெறும்போது, நகரப் பெரியோர் தோழர் ஆசைத்தம்பி அவர்களுக்கு மாலைகள் அணிவித்துச் சிறப்பித்தனர். ஊர்வலம் நாடார் பரிபாலன சங்கம் வரை வந்து முடிவுற்றது.

அன்று இரவு 8 மணிக்கு செல்லூக் கடைத் திடலில் திரு. வி. வி. இராமசாமி தலைமையில் பாராட்டுப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அவர் தனது தலைமையுரையில், கழக வளர்ச்சியை மேலும் ஊக்குவிக்க வேண்டிய முறைகளை விளக்கினார். மற்றும் தோழர்கள் எஸ். இரத்தினம், அரங்கநாதன், பாஸ்கரன் ஆகியோர் ஆசைத்தம்பி அவர்களைப் பாராட்டிப் பேசினர். தோழர் ஆசைத்தம்பி அவர்கள், தன்னை வரவேற்றுச் சிறப்பித்த அனைவருக்கும் நன்றி கூறி சிறப்புரையாற்றினார். அவருக்கு நகர தி. மு. கழகம், எம்.ஜி.ஆர். மன்றம், எம்.எஸ்.பி. எஸ். படிப்பகம், மற்றும் பலரின் சார்பில் மலர் மாலைகளும், கைத் தறித் துண்டும் அணிவிக்கப்பட்டன.

மதுரை:
29—3—57-ல் மதுரை நகர் தி. மு. கழகச் சார்பில் தோழர் ஆசைத்தம்பி அவர்களுக்கு, ஓர் தேநீர் விருந்து மதுரை உடுப்பி உணவு விடுதியில் நடைபெற்றது. தோழர் டி. கே. துரையரசு தலைமை வகித்தார். தோழர்கள் டாக்டர் அருணாசலம், வழக்கறிஞர் பார்த்தசாரதி, மற்றும் பலரும் ஆசைத்தம்பி அவர்களைப் பாராட்டிப் பேசினர். தோழர்கள் சேதுராமன், பாண்டியன் ஆகியோர் மலர் மாலை அணிவித்து, வாழ்த்து இதழ் வாசித்துக் கொடுத்தனர். தோழர் ஆசைத்தம்பி பாராட்டுதலுக்கு நன்றி தெரிவித்து, தேர்தலில் தி. மு. கழகம் பெற்றவெற்றியின் விளக்கமும் — எதிர்கால பணிகளையும் விளக்கியும் சிறந்த கருத்துரை வழங்கினார். பாராட்டுக்கு வருகைதந்த அனைவருக்கும்மதுரை மாவட்டச் செயலாளர் தோழர் எஸ். முத்து நன்றி கூற விழா இனிது முடிவுற்றது. விழாவில் சுமார் 300 பேர்வரை வந்திருந்தார்கள்.

★

வெற்றி பெற்ற கழகத் தோழர்களுக்குப் பாராட்டு

சிங்கப்பூர்:
17—3—57 காலை 10 மணிக்கு, தேர்தலில் வெற்றி பெற்ற அண்ணா அவர்களைப் பாராட்டும் முகத்தான் சிங்கப்பூர் பாராட்டுக் குழுவினர் சார்பில், சிங்கப்பூர் - 125, சிரங்கூன் ரோடு, தமிழர் சீர்திருத்த சங்க இல்லத்தில் தேநீர் விருந்தொன்று நடைபெற்றது. தோழர்கள் முருகானந்தம், ஆ. சு. இராமலிங்கம், குடந்தை சபூர், தருமன், நாகராசன், இளங்கோ ஆகியோர் அண்ணா அவர்களைப்பாராட்டியும், மகிழ்ச்சி தெரிவித்தும் வாழ்த்தியும் சொற்பொழிவாற்றினர்.

அறந்தாங்கி
8—3—57ல், அண்ணா அவர்களின் வெற்றிக்கு பாராட்டு தெரிவித்து, அறந்தாங்கி தி. மு. கழகத்தின் சார்பில் ஓர் சிறப்பான ஊர்வலம் நடைபெற்றது. ஊர்வலத்தில் வாண வேடிக்கைகள் — வெடிகள் முழக்கியும், இனிப்புகள் வழங்கியும் வெற்றி விழா கொண்டாடப்பட்டது.

திருக்களம்பூர்:
அண்ணா அவர்களும், மற்றும் தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், க. அன்பழகன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, மு. கருணாநிதி, சத்தியவாணிமுத்து, ஏனைய வெற்றி பெற்ற தோழர்கள் அனைவரையும் பாராட்டும் முகத்தான் பொதுமக்களுக்கு பிஸ்கட், பிட்டாய் முதலியவை வழங்கப்பட்டது.

மூலனூர்:
'நம் நாடு' 'திராவிட நாடு' விற்பனையாளர் தோழர் எஸ். முத்து அவர்கள் அண்ணா அவர்களின் வெற்றியைப் பாராட்டி, மூலனூர் பொதுமக்களுக்கு வாழைப்பழம், கிராப்ஸ், தேநீர் முதலியவை வழங்கினார்.

சென்னை 9-வது வட்டம்:
சென்னை 9-வது வட்ட தி. மு. கழகத் தோழர்கள் அண்ணா அவர்களின் வெற்றிச் செய்தியை துண்டறிக்கை மூலம் விளம்பரப்படுத்தியும், தோழர் துரை அவர்களின் தலைமையில் ஓர் ஊர்வலம் நடத்தியும், குழந்தைகளுக்கு மிட்டாய், பழம் முதலியவை வழங்கியும் வெற்றி விழா கொண்டாடினர்.

நன்றியறிவிப்பு

பொதுத் தேர்தலில் சென்னை சட்ட சபைக்கு சேலம் மாவட்டம் ஆத்தூர் தொகுதியில் தி. மு. கழக அபேட்சகனாகப் போட்டியிட்ட எங்களை ஆதரித்து வெற்றிபெறச் செய்த ஆத்தூர் தொகுதி வாக்காளர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். கழகத்தின் வெற்றிக்கு அயராது பாடுபட்ட பெரியோர்கள், தாய்மார்கள், தோழர்கள் அனைவருக்கும் எங்களது நன்றி என்றும் உரித்தாகுக.

நாட்டின் முன்னேற்றத்திற்கும் குறிப்பாக ஆத்தூர் தொகுதியின் வளர்ச்சிக்கும் வேண்டிய நல்ல ஆலோசனைகளை அவ்வப்போது தந்து உதவ வேண்டுகிறோம்.

அன்புள்ள,
எம். பி. சுப்பிரமணியம்
டி. இருசப்பன்

★

டில்லி பாராளுமன்றத் தேர்தலில் நாமக்கல் தனித் தொகுதிக்கு தி. மு. க. அபேட்சகனாகப் போட்டியிட்ட என்னை ஆதரித்து வாக்குகள் அளித்த வாக்காளர் பொதுமக்களுக்கும், அதற்காக அல்லும்பகலும் அயராது பணியாற்றிய கழகத் தோழர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும், எனது நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறைந்த வாக்குகளில் தேர்தல் முடிவு எனக்குப் பாதகமானது கண்டு துயரத்தில் ஆழ்ந்துள்ள அன்பர்கள்—கழகத் தோழர்கள்— ஆதரவாளர்கள் — வாக்களித்தப் பெருமக்கள் அனைவரும் ஆறுதல் பெறவேண்டுகிறேன்.

அன்பன்
டி. வி. சுந்தரராசன்

★

கோபித் தொகுதியில் தி. மு. க. அபேட்சகனாகத் தேர்தலில் போட்டியிட்ட எனக்கு வாக்களித்த பெருமக்களுக்கும், வசதிகளற்ற நிலையில் அயர்வின்றி தேர்தல் பணிபுரிந்த தோழர்களுக்கும் பெரியோர்களுக்கும் நன்கொடை உதவியவர்களுக்கும் எனது நன்றியை உரித்தாக்குகிறேன்.

அன்பன்
கன்னியப்பன்

★

பொதுத் தேர்தலில் ஆலங்குடித் தொகுதியில் தி. மு. க. அபேட்சகனாகப் போட்டியிட்ட எனக்காகப் பணியாற்றிய கழகத் தோழர்களுக்கும்,—ஆதரவாளர்களுக்கும்—நண்பர்களுக்கும் என் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். தோல்வியை வெற்றிக்கு அறிகுறி என்பதை மனதில் கொண்டு பாடுபடுவேன். என் தோல்வியை மனதில் கொண்டு, கழகத்தை வளர்க்கத் தீவிரமாகப் பாடுபடுவேன்.

அன்பன்
கே. வி. சுப்பையா

சென்னையில் அண்ணா முழக்கம்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அல்ல: தமிழக அரசியல் வரலாற்றில் புதியதோர் கட்டம்! நமது கழகத்தின் வரலாற்றில் புதிய பொறுப்பானதோர் கட்டம்!

பொறுப்பை உணருவோம்

"நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற புதிய பொறுப்பினை நாம் நன்கு உணருவோம்.

சூடு குறைய வேண்டும்

"நமது தோழர்கள் இனி தங்களுடைய பேச்சில், சூட்டினை குறைத்துக்கொண்டு ஒளியை அதிகரித்துக் கொள்ளவேண்டும்; வீரம் குறைய வேண்டும்—விவேகம் மிகவேண்டும்: நாம், நல்ல பக்குவமும் பயிற்சியும் பெறவேண்டும்.

நிவட்டியும்........

"நிவட்டிக்கும்-டார்ச் விளக்கிற்கும், சம்மட்டிக்கும்-ஆபரேஷன் கத்திக்கும் உள்ள வேறுபாடு நமக்குத் தெரிந்தே இருக்கிறது! மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் சட்டசபையில் நாம் பணியாற்றுவோம்!

எதிர்க் கட்சி எப்படியிருக்கும்?

"எதிர்க் கட்சி எப்படி இருக்க வேண்டும் என்ற அரசியல் தத்துவம் பற்றி கேட்பார்களானால், நான் கூறுவதெல்லாம், 'எங்களைக் கேட்பதைவிட ஆளுகின்ற கட்சியைக் கேட்கவேண்டும்,' என்றுதான் கூறுவேன். எதிர்க் கட்சி எப்படிப்பட்டதாயிருக்கவேண்டும் என்பதை ஆளும் கட்சியினர் நடந்துகொள்வதைப் பொறுத்துத்தான் கூறமுடியும்.

ஆள்வோரைப்பொறுத்தே!

"ஆளுங்கட்சி அடக்க ஒடுக்கமாக நடந்து கொண்டால் எதிர்க் கட்சியும், அவ்வாறே இருக்கும்.

"ஏனோதானோ என்ற போக்கில் எடுத்தேன்—கவிழ்த்தேன் என்று ஆளுங் கட்சி நடந்து கோண்டால், எதிர்க் கட்சியும் அதற்கு தகுந்த மாதிரி தான் அமையும். சட்டசபையில் நல்ல விவாத உணர்ச்சியுடன் ஆளுங்கட்சியினர் நடந்து கோள்வார்களேயானால், நாமும் நமது பங்கினைக் கட்டாயம் சரிவரச் செலுத்துவோம்.

"எதிர்க் கட்சியை உருவாக்க வேண்டிய பொறுப்பு ஆளுங் கட்சிக்கு உண்டு என்ற கருத்தில் தான், ஜெயப்பிரகாஷ் நாராயண் கூறினார்—'எதிர்க் கட்சி அமைக்க உதவுங்கள்' என்று! இந்த நிலையில் இப்போது எதிர்க் கட்சி உருவாகியுள்ளது. இந்த எதிர்க் கட்சியிடம் ஆளுங் கட்சியினர் எப்படி நடந்துகொள்ளப்போகின்றனர்?

மரியாதையுடன் நடந்துகோள்வார்களா?

"எதிர்க் கட்சியினருக்குத் தர வேண்டிய மரியாதையுடன் அவர்களை நடத்துவார்களா, ஆளுங் கட்சியினர்? அந்தப் பொறுப்புணர்ச்சியுடன் அவர்கள் நடந்துகொண்டால் நாமும் பொறுப்புடன் காரியங்களை கவனிப்போம்.

சட்டசபைக் கட்சிக் கூட்டங்கள், மந்திரிசபைக் கூட்டங்கள் என்ற அளவுடன் அவர்கள், விவகாரங்கள் பற்றிய விவாதங்களை நிறுத்திக் கொள்ளாமல், சட்ட சபையின் விவாதத்திற்கு எல்லா விவகாரங்களையும் கொண்டு வந்து காரியமாற்றுவார்களேயானால் நாம், நிச்சயம் அந்த விவாதங்களில் பங்கு கொண்டு பயன் தரும் வகையில் நடந்துகொள்வோம்.

நல்லது செய்தால்

"ஆளுங்கட்சியினர், தப்பித் தவறி நல்லது செய்தால் அவற்றிற்கு நிச்சயம் ஆதரவு தருவோம்; தவறான வழி சென்றால், கண்டிக்கத் தவறமாட்டோம்.

இப்படை தோற்கின்

"இங்கே வீற்றிருக்கும் திராவிட முன்னேற்றக் கழக சட்டசபை உறுப்பினர்களைப் பாருங்கள்.

"இவர்கள் எல்லாம் கல்லடியைத் தாங்கியவர்கள்! சொல்லடியை ஏற்றவர்கள்! சிறை வாழ்வை அனுபவித்தவர்கள்! ஏளனத்தையும் இழி செயலையும் கண்டு கலங்காதவர்கள்! நெறித்த புருவத்தை மறந்தவர்கள்! 'புன்னகைதான், கொள்கை வெற்றி பெற உதவும்,' என்பதை உணர்ந்தவர்கள் நாட்டின் அருமையான செல்லப் பிள்ளைகள்! இவர்கள் ஒரு நல்ல பொறுப்பான எதிர்க் கட்சியினராகப் பணியாற்ற விட்டால் வேறு யார்தான் பணியாற்றுவார்கள்? நான் அடிக்கடி கூறுகிற—'இப்படை தோற்கின் எப்படை வெல்லும்?'—என்ற மொழிப்படி, இப்போதும் கூறுகிறேன்—'இவர்கள் நல்ல எதிர்க்கட்சியினராக முடியா விட்டால், வேறு யார் ஆக முடியும்?'—என்று!

அண்ணா

சுற்றுப்பயணம்

ஏப். 3 : ஈரோடு
4 : மேனூர்
6 : களம்பூர்
7 : சென்னை — காலை : திருமணம்
மாலை : திருவல்லிக் கேணி கூட்டம்
17 : நெல்லிக் குப்பம்— திருமணம்
18 : விருத்தாசலம்— பொதுக் கூட்டம்.

★

7-4-57!

7—4—57 அன்று மாயவரத்தில், **அண்ணா** சிறப்புச் சோற்பொழிவுக்கு ஏற்பாடாகி இருந்ததை, தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்க நேரிட்டதற்காக வருந்துகிறேன். விரைவில், வேறு நாள் குறிப்பிட்டு ஏற்பாடு செய்துதரப்படும். அன்பர்கள், மாற்றம் கண்டு வருந்தாதிருக்க வேண்டுகிறேன்.

பொதுச்செயலாளர் தி.மு.க.

பாராட்டு விழா

3—4—57 மாலை 6 மணிக்கு, சென்னை—சூளை, வ. பு. அ. சௌந்திரபாண்டியனார் நினைவுப் படிப்பகச் சார்பில், ஆவடி சீனிவாசய்யர் தெருவில் (சூளை மில் பின்புறம்; 17-வது வட்டம்), தேர்தலில் வெற்றி பெற்ற தோழியர் **சத்தியவாணிமுத்து** அவர்களுக்கு ஓர் பாராட்டுக் கூட்டம் தோழர் எம். எஸ். சின்னசாமி தலைமையில் நடைபெறும்; தோழர்கள் மு. கருணாநிதி, சி. பி. சிற்றரசு ஆகியோர் பாராட்டுரை வழங்குவர்.

பொதுக்கூட்டம்

3—4—57 மாலை 6 மணிக்கு, சென்னை—கோடம்பாக்கம் பஸ் நிலையம் அருகிலுள்ள சிங்கார கிராமணி திடலில், 35-வது வட்டத் தி. மு. கழக ஆதரவாளர்கள் சார்பில், தோழர் ஏ. எஸ். ஜேசுபாதம் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் **கண்ணதாசன், என். சீவரத்தினம், முகவை-ஆர். எஸ். பாண்டியன்** சொற்பொழிவாற்றுவர்.

சென்னை 4-வது வட்ட தி. மு. க. நிர்வாக உறுப்பினர்களுக்கு:

3—4—57 மாலை 8 மணிக்கு 4-வது வட்டத் தி. மு. கழக நிர்வாக உறுப்பினர் கூட்டம் கழக நிலையத்தில் (20/22, காளிங்கராய முதலி தெரு, சென்னை-21) நடைபெறும்; அதுபோது, பல முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

★★★★★★★★★★★★★★★★★

நடன நாடகம்!

6-4-57 சனி மாலை 6-30 மணிக்கு கோகலே மண்டபத்தில்

இரா. நெடுஞ்செழியன்
அவர்கள் தலைமையில்

குமாரி
ஈ. வி. சரோஜா
பங்கேற்கும்
நடன நாடகம் நடைபெறும்

★

நன்கொடை: ரூ. 3, 2, 1.

குறிப்பு: நுழைவுச் சீட்டுகள் இராயபுரம் 'அறிவக'த்தில் கிடைக்கும்.

★★★★★★★★★★★★★★★★★

'வாக்குறுதியளித்தபடி சேலத்தின் கோரிக்கையை நிறைவேற்றுக'

'தாதுப் பொருள்களை வெட்டியெடுக்கத் தனிப்பட்டவர்களுக்கு அனுமதியளிப்பதேன்?'

சேலம் நகரசபை குரலெழுப்புகிறது

சேலம், மார்ச் 29—
சேலம் மாவட்டத்திலுள்ள இரும்புத் தாதுப் பொருள்களை வெட்டி எடுக்க கோவை மாவட்டத்தைச் சேர்ந்த தனிப்பட்டவர்களுக்கு மத்திய அரசாங்கம் அனுமதியளித்துள்ளதைக் கண்டித்தும், ஏற்கனவே வாக்குறுதியளித்தபடி பொதுத் துறைக்குச் சொந்தமான ஒரு இரும்பு-எஃகு இயந்திரத் தொழிற்சாலையை சேலத்தில் நிறுவ வேண்டுமென்று கோரியும், சேலம் நகரசபை ஏகமனதாக தீர்மானமொன்று நிறைவேற்றியிருக்கிறது.

தீர்மானத்தை தோழர் சி. வேலு என்பவர் பிரரேபித்தார்.

பிரிட்டனில் போராட்டம் வலுக்கிறது

17 லட்சம் பேர் வேலைநிறுத்தம் செய்கின்றனர்

லண்டன், ஏப். 1—
கடந்த 30 ஆண்டுகளில் பிரிட்டனில் தற்போது ஏற்பட்டுள்ள தொழில் நெருக்கடியைப் போன்று ஏற்பட்டதில்லை என்றே கூறும் அளவிற்கு நிலைமை உருவாகி வருகிறது.

கப்பல் கட்டும் தொழிலாளர் கடந்த 11 நாட்களாக ஊதியத்தில் 10 சதம் உயர்வு கோரி வேலைநிறுத்தம் செய்துவருகின்றனர்.

இவர்களைத் தொடர்ந்து லண்டனில் சுமார் 1,000 பொறியியல் நிறுவனங்களில் வேலை செய்வோரும் 10 சதவிகிதம் ஊதிய உயர்வு கோரி வேலைநிறுத்தம் செய்துள்ளனர்.

இவர்களையும் சேர்த்து தற்போது 17 இலட்சம் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்துள்ளனர்.

இதனால் ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளது. இலட்சக்கணக்கான பவுன்கள் மதிப்புப் பெற்ற ஒப்பந்தப் பொருட்கள் தேங்கிக் கிடக்கின்றன.

அடுத்த சனிக்கிழமைக்குள் 30 இலட்சம் பொறியியல் ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்ய முற்படக்கூடும் என்றும் அஞ்சப்படுகிறது.

மீண்டும் காங்கிரஸ் மந்திரி சபையாம்!

ஒரிசா கவர்னரின் முடிவு?

கட்டாக், ஏப். 1—
ஒரிசா கவர்னர், காங்கிரஸ், கணதந்திர பரிஷத் கட்சித் தலைவர்களுடன் கலந்தாலோசித்த பின், காங்கிரஸ் கட்சித் தலைவர் அரிகிருஷ்ண மேதாப் அவர்களை புதிய அமைச்சரவை அமைக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

நிலையான அமைச்சரவையை காங்கிரஸ்தான் அமைக்க முடியும் என்று கவர்னர் நம்புகிறாராம்.

புதிய காங்கிரஸ் அமைச்சரவை 4-ந் தேதி பதவி ஏற்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இரத்த தானம் தந்தோர்!

சென்னை, ஏப். 1—
கடந்த ஆண்டில் மொத்தம் 6,037 பேர்கள் இரத்த தானம் தந்துள்ளனர் என்றும், அவர்களில் 5,530 பேர் பணம் பெற்றுக்கொண்டனர் என்றும் 507 பேர் எவ்விதமும் பெறவில்லையென்றும் தெரியவருகிறது.

திருச்சி மாவட்டத் தோழர்களுக்கு:

"திருச்சி மாவட்டத்தில் தி. மு. கழகக் கிளைகள் ஆரம்பிக்க ஆர்வம் உள்ள தோழர்கள் அருகிலுள்ள கிளைக் கழக முக்கியத் தோழர்களிடம் அத்தாட்சி பெற்று, தேவைப்படும் உறுப்பினர் பதிவுத் தாள்களை, 'எ. பி. தருமலிங்கம், செயலாளர் தி. மு. கழகம், திராவிடப் பண்ணை, திருச்சி' என்ற முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளுமாறு கோருகிறேன்" என்று திருச்சி மாவட்டச் செயலாளர் அ. பெ. தருமலிங்கம் அறிவிக்கிறார்.

ரூ. 17 கோடி செலவிட்டபின் குழு ஒன்று நியமனம்!

பம்பாய், ஏப். 1—
கைத்தறி உற்பத்திகளின் ஏற்றுமதியைப் பெருக்குவதற்கு குழு ஒன்று நியமிக்கப்படுமாம்!

1956-ம் ஆண்டில் மொத்தம் 6 கோடி கெசம் கைத்தறித் துணி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

கடந்த நான்கு ஆண்டுகளில் கைத்தறி முன்னேற்றத்திற்காக மொத்தம் ரூ. 17 கோடி செலவிட்டதாக இந்திய அரசாங்கம் கூறுகிறது.

தற்போது கைத்தறி விற்பனைக்குக் காட்டப்படும் முக்கிய சலுகையான (தள்ளுபடி) 'ரிபேட்' நீடிக்கப்படுகிறது.

மக்கள் கிளர்ச்சி வெற்றி பெற்றது

மூன்று மாத போராட்டம் முடிவடைந்தது

ஜோகன்ஸ்பர்க், ஏப். 1—
ஆப்பிரிக்காவில் பஸ் கட்டணங்கள் உயர்த்தப்பட்டதைக் கண்டித்து 40,000 ஆப்பிரிக்க மக்கள் கிளர்ச்சி துவக்கியதும், மக்கள் பஸ்களைப் பயன்படுத்திக் கொள்ளாததால், பஸ் போக்குவரத்துக்கு நஷ்டமேற்பட்டதும் தெரிந்ததேயாகும்.

மூன்று மாதங்களாக நடைபெற்ற போராட்டத்திற்குப் பின் இப்போது, பழைய கட்டணத்திற்கே மக்கள் அனுமதிக்கப்படுகின்றனர்; பஸ் கட்டண உயர்வு கண்டனப் போராட்டமும் முடிவடைந்தது.

பிலாய், துர்காபூர் உருக்கு தொழிற்சாலைகள்

நிர்வாகம் கைமாறுகிறது

புதுடில்லி, மார்ச் 31—
பிலாய், துர்காபூர் இரும்பு உருக்குத் தொழிற்சாலைகளின் நிர்வாகம் இதுவரையில் சர்க்காரின் நேரடி கண்காணிப்பில் இருந்தது; இப்போது அவை, இந்துஸ்தான் உருக்குக் கம்பெனியின் கைக்கு மாற்றப்பட்டுள்ளதாம்.

சர்க்கார் இவ்வாறு நிர்வாக மாற்றம் செய்வதாக சர்க்கார் குறிப்பு ஒன்று கூறுகிறது.

இரயிலில் தாமதித்தற்குக் காரணம் தெரிமா?

புதுடில்லி, மார்ச் 30—
இந்திய இரயில்வே இலாகாவிற்குத் தேவையான நல்ல நிலக்கரி கிடைக்காததே இரயில்கள் தாமதமாக ஓடுவதற்குக் காரணமென்றும், இதனால் சில சமயங்களில் எஞ்சின்கள் நின்றுவிடுவதாகவும் மக்கள் சபையில் தகவல் தரப்பட்டிருக்கிறது.

ஆசிரியர் பிராவிடண்ட் நிதி வசதி பற்றி முடிவு?

சென்னை, ஏப். 1—
ஆசிரியர்கள் 55 வயதான பிறகும்கூட தொடர்ந்து சேவை செய்தாலும், அவர்கள் விரும்பினால், அவர்களுடைய 'பிராவிடண்ட் நிதி' கணக்கை 55-வது வயதுவரை மதிப்பிட்டுக்கொடுப்பதற்கு சென்னை அரசாங்கம் முடிவு செய்துள்ளதாகத் தெரிய வருகிறது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டம்

★

14-4-57 ஞாயிறு அன்று திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த குளித்தலையில் நடைபெறும்.

சென்னை 'அறிவகம்' 1—4—57

தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.